# தமிழ்நாடு சுற்றுலா

## ''சுற்றுலா நட்பு ஆட்டோ மூன்றாம் கட்ட அறிமுக விழா''

## <u>செய்தி வெளியீடு</u>




தமிழ்நாடு சுற்றுலாத் துறை ''விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்'' என்ற நிகழ்ச்சியினை தமிழகத்திலுள்ள பெரிய நகரங்களில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் சிறப்பான முறையில் நடத்தியுள்ளது. இந்நிகழ்ச்சி சுற்றுலா பயணிகளை இன்முகத்தோடு வரவேற்பது குறித்து ஆட்டோ ஓட்டுநர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்தோடு நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சென்னையில் 63 ஆட்டோக்களும் (இரண்டு கட்டங்களாக), கன்னியாகுமரியில் 18 ஆட்டோக்களும், குற்றாலத்தில், 28 ஆட்டோக்களும் மதுரையில் 7 ஆட்டோக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சுற்றுலா பயணிகளை உபசரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழக அரசின் ஆணையினைப் பெற்று இந்த ஆட்டோக்களுக்கு சுற்றுலா தொடர்பான காட்சிகளை வண்ணம் பூசி <u>''சுற்றுலா நட்பு ஆட்டோ''</u> என்ற வகையில் எளிதாக பயணிகள் அடையாளம் காணும் வகையில் வடிவமைக்கப்பட்டு சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் திருச்சி, தஞ்சாவூர், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்வு செய்யப்பட்ட ஆட்டோக்களையும் சுற்றுலா நட்பு ஆட்டோக்களாக அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்படும் ஆட்டோக்கள் பற்றிய விவரம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

குறிப்பாக சென்னையில் மூன்றாம் கட்டமாக அடையாள காணப்பட்ட 50 ஆட்டோக்களில் 25 ஆட்டோக்களுக்கு சுற்றுலா சம்மந்தமான வண்ணம் பூசி சுற்றுலா நட்பு ஆட்டோ என்ற வகையில் வடிவமைக்கப்பட்டு தற்போது தயார் நிலையில் உள்ளது. இந்த 25 சுற்றுலா நட்பு ஆட்டோ சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக சென்னை தீவுத்திடலில் **2.6.2009** அன்று மாலை 4.00 மணி அளவில் **மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ் ராஜன் அவர்கள்** கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில் சுற்றுலாத் துறை செயலர் **முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப.,** அவர்களும் சுற்றுலாத் துறை இயக்குநர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் **முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,** கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் 25 சுற்றுலா நட்பு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு, டி.வி.எஸ் நிர்வாகம் காப்பீடு (Insurance) வழங்கியும், ரேடியோ மிர்ச்சி நிறுவனம் சீருடை (Uniform) வழங்கியும் சிறப்பித்தார்கள்.